# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 ஜுலை 2002 இதழ் - 7



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | உங்கள் சொந்த கிராம.... | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | வாலிபர் பகுதி | 15 |
| 5. | மத்தேயு ஒரு கண்ணோட்டம் | 19 |
| 6. | சிறுவர் பகுதி | 20 |
| 7. | மறைந்திருக்கும் பாவங்கள் | 21 |
| 8. | அப்போஸ்தலர்களின் மாதிரியே... | 25 |
| 9. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 31 |

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

**Editor**
**S. Rajanayagam**

**Honorary Editor**
**J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.15** **July - 2002** **Issue-7**

**ஆசிரியர் உரை**

# "போர் வேண்டவே வேண்டாம்"

**மி**க சமீப நாட்கள் வரை, நமது நாளிதழ்களில், போர் பற்றிய செய்தி தேவைக்கும் அதிகமாகவே இடம் பெற்றதை நாம் நன்றாக அறிவோம். அப்போது, நமக்கும், நமது அண்டை நாட்டுக்கும் போர் நடந்தே தீரும் என்ற நிலை திட்டமாகத் தெரிந்தது. போருக்கான ஆயத்தங்கள் எல்லையின் இருமருங்கிலும் வெகு மும்முரமாக நடந்தது. அணு ஆயுதங்களைக் கையிலே வைத்திருக்கின்ற இவ்விரு நாடுகளுக்கிடையிலான பதற்ற சூழ்நிலையைக் கண்டு பதறிப்போன உலக நாடுகள், தங்கள் தூதுவர்கள் மூலம், இருதரப்பினரையும் ஓயாமல் சந்தித்து, போரைத் தவிர்ப்பதற்கான அவசியத்தை அசராமல் எடுத்துரைத்தது. அணு ஆயுத யுத்தத்தில் வெற்றி எத்தரப்புக்கும் இருக்காது என்ற உண்மையையும், அழிவோ அளவிட முடியாததாக இருக்குமென்ற முன்னுதாரணத்தையும், முன்னேறும் நாடுகளான உங்களால், அதன் கொடுமையைத் தாங்க முடியாது என்ற யதார்த்தத்தையும் எடுத்துச் சொல்லி, எச்சரித்துப் புத்திமதி சொன்னார்கள். எச்சரிப்பின் உண்மைத் தன்மையை ஓரளவு உணர்ந்து கொண்ட தலைவர்கள், போரைத் தவிர்ப்பது என்று தற்காலிகமாக முடிவு செய்தனர். குடிமக்களாகிய நமக்கு இம்முடிவு பெரும் நிம்மதியைத் தந்துள்ளது. எடுக்கப்பட்ட முடிவுக்கான காரணத்தைக் கவனித்தால், வெற்றி எத்தரப்புக்கும் இருக்காது என்பதைவிட, பேரழிவு இருதரப்பிலும் எக்கச்சக்கமாக இருக்குமென்பதே அதிக நெருக்குதலை ஏற்படுத்தியிருக்குமென்று தெரிகிறது. இந்த உண்மை உங்களுக்கு நினைவில் இருக்கட்டும்.

சரி, ஆன்மீக இதழான நமது ஆசானில், ஜென்மீகப் போர் பற்றி, இதற்கு மேலும் எழுதி, உங்களுக்கு வெறுப்பேற்றாமல், பரிசுத்த

வேதாகமத்தில், சேனைகளின் கர்த்தரோடு போரிடுவதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தின ஒரு கூட்டத்தாருக்கு, தேவ மனிதனால், ஏற்ற சமயத்தில் கொடுக்கப்பட்டதொரு அறிவார்ந்த எச்சரிப்பு பற்றி எடுத்துரைக்க ஆசைப்படுகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள அனைத்து நூல்களிலுமே, அப்போஸ்தலர் நடபடிகள் நூலுக்குத் தனிச்சிறப்பு உண்டு. சுமார் 30 ஆண்டு கால சரித்திரத்தை உள்ளடக்கியுள்ள இந்நூலில் தான், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற இயேசு பெருமானின் பிரதான கட்டளை நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பூவுலகில் பிறந்த ஒவ்வொருவரும், இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டிய கேள்வியும், அதற்கான தெளிவான பதிலும் இந்நூலில் தான் இடம் பெற்றுள்ளது. இப்படி, சிறப்புகள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலில்தான், "...... **தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள்**" என்ற (அப் 5:39), போர் தவிர்ப்பு எச்சரிப்பும் இடம் பெற்றுள்ளது.

இப்பொழுது, இந்த எச்சரிப்புக்கான பின்னணி பற்றிப் பார்ப்போம். தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியும் (எபே. 3:10) தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் படியும் (அப்போஸ்தலர். 2:16) யோவான் ஸ்நானகனுடைய பிரசங்கத்தின்படியும், (மத். 3:2) இயேசுவானவரின் வாக்குத்தத்தின்படியும் (மத். 16;16-18) எருசலேம் பட்டணத்தில் பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரின் அநுக்கிரகத்தால் பெலத்தோடே ஸ்தாபிக்கப்பட்ட, கிறிஸ்துவின் சபை, ஆவியிலும், எண்ணிக்கையிலும் வெகுவேகமாக வளர்ந்து வந்த நேரம் அது. ஆம், இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷம், அந்நாட்களில் வெற்றி நடைபோட்டது. மூவாயிரம், ஐயாயிரம் என்று ஓரளவு எண்ணித் தொகை பார்க்கப்பட்ட நிலை மாறி, திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் என்றும், சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று என்றும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மறுக்க முடியாத அளவில் அநேக அற்புதங்களும், அளவில்லாத மனமாற்றங்களும் அப்போஸ்தலர்களால் நடைபெறுவதைக் கண்டு பொறுக்க முடியாத தேவ விரோதக் கும்பல் ஒன்று, அப்போஸ்தலர்களைப் பிடித்து சிறையிலடைக்கிறது (அப். 5:18). கர்த்தரோ, அவர்களை இன்னுமொரு அற்புதத்தின் மூலமாக வெளியே அழைத்து வந்து, ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் குறித்து, ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்று கட்டளையிடுகிறார் (5:19,20)

பொழுது விடிந்து, அப்போஸ்தலர்களை விசாரணைக்கு அழைத்து வரச் சென்ற போர்ச்சேவகர்கள் அவர்களைக் காணாமல் அதிர்ச்சியடைந்து, அவர்கள் சிறைச் சாலையில் இல்லையென்ற செய்தியை வந்து சொன்னபோது, சேனைத் தலைவனும் பிரதான

ஆசாரியர்களும் கலக்கமடைந்தார்கள். பிறகு, எப்படியோ, அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட போது, "எங்கள் கட்டளையை மீறி, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணி, அவன் இரத்தப் பழியை எங்கள் மீது சுமத்தப் பார்க்கிறீர்களோ?" என்று கடுமையாக விசாரிக்கப்பட்டனர்.

அப்பொழுது, ஆலோசனைச் சங்கத்தாரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், **"மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது."** என்று ஆரம்பித்து, ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தனர். (அப். 5:29-32) அதில், ஆலோசனைச் சங்கத்தாரின், முகத்துக்கு நேரே கையை நீட்டி, நீங்கள் கொலையாளிகள் என்று குற்றஞ்சாட்டினதோடு, தங்களின் செய்கைகளுக்குப் பரிசுத்த ஆவியானவரும் சாட்சி என்றார்கள். **மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், ஆவியையும்** துளியும் நம்பாத சதுசேய சமயத்தாரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஆலோசனைச் சங்கத்தாரால், தாங்கள் கொலையாளிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்டதையும், ஆவியானவர் துணைக்கு அழைக்கப்பட்டதையும் கேட்ட பொழுது மூர்க்கமடைந்து, அதற்கு மேல் வேறு எதையும் கேட்கத் தயாரில்லாமல், கொதித்தெழுந்தனர். தங்கள் நம்பிக்கையின் ஆணிவேரையே அசைக்க முயற்சிக்கும் இந்த அற்பர்களைத் தண்டிக்க ஒரே வழி, அவர்களைக் கூண்டோடு கொலை செய்வது தான் என்ற முடிவுக்கு வந்தனர்.

அங்கே, ஆலோசனைச் சங்கத்தாரின் அடாவடித்தனம் அத்து மீறிப் போகிறதைக் கண்ணுற்ற, வயதில் முதிர்ந்தவனும், கல்வியில் சிறந்தவனும், வேதத்தில் தேறினவனும், மிகுந்த அனுபவசாலியுமான கனம் பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பரிசேயன், சரித்திரத்தின் சில நிகழ்வுகளை எடுத்துக்காட்டாக கூறி, அவர்கள் செய்யத் தீர்மானித்திருந்த காரியத்தைக் குறித்து, "ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை, வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11) என்ற ஞானியின் வாக்குக்கிணங்க, இவ்விதம் புத்தி சொன்னான். **"இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் இவர்களை விட்டுவிட்டுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது;** ***தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள்"*** என்றான் (அப் 5:38,39).

நமது தமிழ் வேதாகமத்தில், **"யோசனை"** என்று சொல்லப்பட்டிருப்பதற்கு, ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கும் வார்த்தையின் பொருள், **"திட்டம்"** என்பதாகும். அங்கே, **"இந்தத் திட்டமும், கிரியையும்"** என்று எழுதப்பட்டுள்ளது. இது, நமது தமிழ் வேதாகமம் தரும் பொருளைக் காட்டிலும் சற்று ஆழமானது.

அதன்படி பார்த்தால், அப்போஸ்தலருடைய பேச்சும், பிரசங்கமும் **தேவத் திட்டத்தின்படியானதாக இருக்கிறது.** அதை அழித்து ஒழித்துவிட உங்களால் கூடாது, கூடவே கூடாது. **அப்படி நீங்கள் முயற்சித்தால், அது தேவ திட்டத்தோடு போரிடுவதற்குச் சமம்.** அப்படிப்பட்ட போர் மிகவும் அபாயகரமானது. ஆகவே, ஆலோசனைச் சங்கத்தாரே, நீங்கள் தேவனோடே, தேவதிட்டத்தோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள் என்று எச்சரித்தான்.

இந்த எச்சரிப்பில் அடங்கியுள்ள இன்னொரு வார்த்தையையும், நாம் கவனிக்காமல் விட்டு விடக்கூடாது. ஆம், அறிவும், விவேகமும், பயமும், பக்தியும் நிறைந்த கமாலியேல், அந்த எச்சரிப்பில் "**போர்**" என்ற மிகப் பெரிய வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். ஆலோசனைச் சங்கத்தாரை எச்சரிக்க விரும்பிய கமாலியேல், தேவனை வருத்தப்படுத்தாதீர்கள் என்றோ, தேவனை எதிர்த்து நிற்க வேண்டாமென்றோ, தேவனுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள் என்றோ, தேவனோடு மோத வேண்டாமென்றோ அல்லது தேவனோடு சண்டையிடாதீர்கள் என்றோ கூடச் சொல்லியிருக்கலாம். ஆனால், இப்பதங்கள் எதையும் பயன்படுத்தாமல், இந்த ரகத்திலேயே மிகவும் முற்றிய வார்த்தை என்று ஐயத்திற்கிடமின்றி கருதப்படுகின்ற "போர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது, **தேவ திட்டத்துக்கு விரோதமாகச் செய்யப்படும் எந்தவொரு செயலும் அவருக்கு விரோதமான "போர்"** என்றே வலியுறுத்திக் கூறுகிறார்.

"போர்" என்பது ஈவு, இரக்கம் பாராமல், தயவு தாட்சண்யம் என்று எதுவும் காட்டாமல், முழு மூச்சுடன் நடத்தப்படும் ஒரு பெருந்தாக்குதல். போரின் பொருள் தெரியாமல், கமாலியேல் இவ்வார்த்தையைக் கண்டிப்பாக பயன்படுத்தியிருக்கமாட்டார். இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசுவது தேவ திட்டத்தின்படியானதாக இருக்குமானால், அந்த நாமத்தைப் பறை சாற்றும் அப்போஸ்தலரின் உயிருக்கு உலை வைக்கும் முயற்சி, தேவ திட்டத்துக்கு எதிரான பெருந்தாக்குதல் என்று கமாலியேல் கருதி, அப்படிப்பட்ட தாக்குதலைத் தவிர்த்து விடுங்கள் என்று கடுமையாக எச்சரித்தான்.

ஏன் கமாலியேல் அப்படிச் சொன்னான்? பரிசேய சமயத்தானாகவும் நியாயசாஸ்திரியாகவும் இருந்த காமலியேல், பழைய ஏற்பாட்டில் மிகவும் பரிச்சயம் உள்ளவனாகவே இருந்திருக்க வேண்டும். அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரின் முடிவு பற்றி அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். ஏனெனில், II. நாளாகமம். 13:12, "**உங்கள் பிதாக்களின் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது**" என்று கூறுகிறது. "**சித்திக்காது**" என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும், வார்த்தைக்கான பொருள், "நீ வாழ்வடைய மாட்டாய்" அல்லது "நீ விருத்தியடையமாட்டாய்" என்பதாகும். அதாவது, தேவனோடு நடத்தும்

போரில், ஒருவனுக்கு வெற்றியும் இல்லை, வாழ்வும் இல்லை, விருத்தியும் இல்லை என்று தெளிவாகக் கூறுகிறது.

தேவனோடு நடத்தும் போர், இரு தரப்பிலும் நாசத்தை ஏற்படுத்தும் அணு ஆயுதப் போர் போன்றதல்ல. இப்போரில், தேவனுக்கு எச்சேதமும் ஏற்படாது. ஆனால், எதிரில் உள்ளவர்களுக்கோ நித்திய நாசம் ஏற்படும். மேலும், இப்போரின் பாதிப்பு, அணு ஆயுதப் போர் போல் ஒன்றிரண்டு தலைமுறைகளுக்கு மாத்திரமிராமல், நித்திய காலத்திற்கானதாக இருக்கும். அறிவும், புத்தியும் உள்ள எந்தவொரு மனிதனும் தன்னை இப்படிப்பட்டதொரு போரில் ஈடுபடுத்தத் துணிய மாட்டான்.

உண்மை நிலை இப்படியிருக்கும்போது, இன்றைய உலகத்தன் மற்றும் கிறிஸ்தவத்தின் நிலை நேர் எதிராக இருக்கிறது. ஆம், இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும், அநேகமாக அனைவரும், ஏதாவது ஒரு வகையில், சேனைகளின் கர்த்தரோடு யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களனைவரையும் நாம் இவ்விதம் பிரிக்கலாம்.

1. தேவன் இல்லையென்று மதிகேடனைப் போல் சொல்லி, (சங்.14:1) அதன்மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். நாத்திகர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

2. தேவ நம்பிக்கையிருந்தும், அந்தத் தேவன் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்காமல், சிருஷ்டிகரை மறந்து, சிருஷ்டியைத் தொழுது, (ரோ.1:25) எப்படியோ அல்லது எதையோ வழிபட்டால் போதும் என்ற நினைப்பில் காரியங்களைச் செய்து, அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். உலகில் உள்ள பல மதங்களும், அவைகளின் வழிபாடும் இவ்வகையைச் சேர்ந்தவை.

3. உண்மையான தேவன், இவர்தான் என்று அறிந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தும், அந்தத் தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியான திட்டம் என்ன என்பதைப் புரிந்து, அதற்குத் தங்களை ஒப்புக்கொடாமல் அவரவர்களுடைய ஆதாயத்திற்கென்றும், பதவி பட்டங்களுக்கென்றும், பேர் புகழுக்கென்றும், கொள்கை கோட்பாடுகளை தங்களுக்குத் தாங்களே வகுத்து, சுய நீதி பேசித் திரிந்து, குருடருக்கு வழிகாட்டுகிற குருடரைப் போன்று வாழ்ந்து, அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். இயேசுவானவர் வாக்களித்து (மத். 16;18) கட்டின, அவருடைய சபையைச் சேராத, ஏனைய சபைப் பிரிவுகள் அனைத்தும் இவ்வகையைச் சார்ந்தவை.

4. இறுதியாக, ஒன்றான மெய்த் தேவன் யார் என்பதையும் அறிந்து, அந்தத் தேவனுடைய மனிதனுக்கான இரட்சிப்பின் திட்டம் என்ன என்பதையும் புரிந்து, அதற்காகத் தங்களைக் கீழ்ப்படுத்தி, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானமும்

பெற்று, இரட்சிப்படைந்து, கர்த்தரால் அவருடைய சபையிலும் சேர்க்கப்பட்டு, தேவன் எதிர்பார்க்கின்ற ஓர் உன்னதமான, பரிசுத்த வாழ்க்கை வாழாமல், தேவனுக்கு விரோதமாகப் போரிட்டுக் கொண்டிருப்பவர்கள். மெய் வாழ்வு வாழாத கிறிஸ்தவர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

இதில், முதல் இரண்டு வகையைச் சார்ந்தவர்களின் நிலையைக் காட்டிலும், அடுத்த இரண்டு பிரிவாரின் நிலைதான் மிகவும் பரிதாபமானது. ஏனெனில், மெய்யான தேவன் யார் என்பதை அறிந்தும் அவருடைய மகத்துவம், வல்லமை, பராக்கிரமம் புரிந்தும், வெற்றிக்கு வாய்ப்பேயில்லாத "வெட்டிப்போரை" அவருக்கெதிராக இவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விரு சாராரும் நடத்திக் கொண்டிருக்கும் போர் எப்படிப்பட்டதென்று இங்கே கவனிப்போம்.

**I. பிரிவினைச் சபையாரின் பகிரங்கப்போர்**

தேவனுடைய திட்டத்துக்கு எதிராகச் செயல்படுவது, தேவனுடன் நடத்தும் போருக்குச் சமம் என்று கமாலியேல் சொல்வது மெய்யானால், இன்றைய பிரிவினைச் சபையாரின் செயல்கள் அனைத்தையுமே தேவனுக்கு எதிரான "போர்" என்றும், அதுவும் "பகிரங்கப் போர்" என்றும் கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம்.

★ எப்படியெனில், தேவன் ஆவியாயிருக்கிறார் என்று வசனத்தில் (யோவா 4:24) தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும், ஒரு கூட்டம் உருவ வழிபாடு செய்து கொண்டிருக்கிறது. இது, யாத் 20:4-ம் வசனத்தின்படி, தேவ திட்டத்துக்கு எதிரானது.

★ கிறிஸ்து சபைக்குத் தலைவராயிருக்கிறார் என்று வசனத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும், ஒரு மனிதனை, தங்களுடைய சபை என்ற கூட்டத்திற்குத் தலைவர் என்று வாய் கூசாமல் சொல்லிக் கொள்கிறார்கள். இது எபே 5:23ன்படி தேவ திட்டத்துக்கு முரணானது.

★ பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானத்தின் மூலம் தான் இரட்சிப்பு என்று வசனம் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாலும், இரட்சிப்புக்குப் பின் ஞானஸ்நானம் என்று திரித்துப் போதிக்கின்றனர். இன்னும், விசுவாசிப்பவர்களுக்குத் தான் ஞானஸ்நானம் என்று வசனம் சொல்லும்போது, விசுவாசிக்க முடியாத குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற பெயரில் எதையோ செய்கின்றனர். இவ்விரண்டு போதனைகளும், மாற்கு 16:16-ன்படி தேவ திட்டத்துக்கு விரோதமானது.

★ வாரத்தின் முதல் நாளில் தான் ஆராதிக்க வேண்டுமென்று வசனம் சொல்லும்போது, வாரத்தின் இறுதி நாளாகிய சனிக்கிழமையை இன்றும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளனர். இது அப்-20:7, I கொரி 16:2 போன்ற வசனங்களின்படி இது தேவதிட்டத்துக்குப் புறம்பானது.

★ விசுவாசிக்கிறவர்களால் செய்யப்படும் அற்புதங்களுக்கும், பேசப்படும் அந்நிய பாஷைகளுக்கும் ஒரு முடிவிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கும்போது, அற்புதம் என்ற பெயரில் ஏமாற்று வித்தைகளையும், அந்நிய பாஷை என்ற பெயரில் வினோத சத்தங்களையும் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது I கொரி 13:8-10 வசனங்களின் படி, தேவ திட்டத்தைக் கேலிக் கூத்தாக்குவதாக உள்ளது.

இப்படியே நான் சொல்லிக்கொண்டு போக ஆரம்பித்தால், இக்கட்டுரையை முடிப்பதற்குக் குறைந்தது ஒரு வார கால அவகாசமும், சில நூறு பக்கங்களும் தேவைப்படும். உணர்வுள்ளவர்களுக்கு உதாரணம் ஒன்று போதும் என்ற எண்ணத்தோடு இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன்.

அருமையானவர்களே, தேவனுக்கு எதிரான தேவ திட்டத்துக்கு எதிரான போர் வேண்டாம் என்று சொன்னபோது, **உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத சதுசேயர்களே உடனடியாகச் செவி கொடுத்திருக்குபோது,** கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறோம் என்று வாய் நிறைய சொல்லிக்கொண்டு, மனம் குளிர பேசிக்கொண்டிருக்கும் நாம், தேவதிட்டத்துக்கு எதிராகச் செயல்பட்டு, நித்திய நாசத்தை ஏற்படுத்தும் போரில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கலாமா? கூடாது தானே. இயேசுவால் கடுமையாகச் சாடப்பட்ட சதுசேயர்களைக் காட்டிலும் நாம் தாழ்ந்தவர்களா? இல்லை தானே! அப்படியானால், நம்முடைய பக்திக்குண்டான காரியங்களை இன்றே ஆராய்ந்து, தேவ திட்டத்திற்கு, தேவனுடைய வசனங்களுக்கு விரோதமாக ஏதாவது இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்வோம். நித்திய காலத்திற்கும் நாசத்தை ஏற்படுத்தும் இந்தப் போரில் ஈடுபடாமல் நம்மைக் காத்துக் கொள்வோம்.

**II. கீழ்ப்படியாத கிறிஸ்தவர்களின் பனிப்போர்**

தேவ திட்டத்துக்கு விரோதமாகச் செயல்படும் பிரிவினைச் சபையாரின் காரியங்கள் பகிரங்கப்போர் எனில், கீழ்ப்படியாத கர்த்தருடைய சபையாரின் செயல்பாடு சந்தேகமில்லாமல் பனிப் போர் தான். ஆம், இது நம்பிக்கைத் துரோகமான மறைமுக யுத்தமாயிருக்கிறது. உண்மையில், இது பகிரங்கப் போரை விட படு மோசமானது.

வேதத்தின்படியான கிறிஸ்தவர்கள், ஒருவேளை வேத வசனங்களின் உபதேசப்படி இரட்சிப்படைந்து, அதே வசனங்களின் உபதேசங்களுக்கேற்ப ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்துக் கொண்டிருந்தாலும், (யோவா 4:24) ஒரு கிறிஸ்தவனிடத்தில் காணப்படவேண்டிய குணாதியங்கள் அங்கே இல்லை என்பதை நாம் குறைந்த சத்தத்தோடாகிலும் சொல்லித்தான் ஆகவேண்டும். இது கலா 5:22, 23 வசனங்களின்படி தேவனுடைய திட்டத்திற்கு எதிரானது. இதுவும் தேவனுக்கு எதிரான போர் தான்.

தயவு செய்து இங்கே கவனியுங்கள். மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தம்மிடத்தில் வந்தவர்களிடமே, **அதற்கேற்ற கனிகளைக் கொடுங்கள்** என்று யோவான் கேட்டிருக்கும் போது, அல்லது கொடுக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்த்திருக்கும்

போது, ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களிடத்தில், தேவன் ஆவியின் கனிகளை எதிர்பார்க்கமாட்டாரா? சொல்லுங்கள். ஆவியின் கனிகள் அனைத்தும் நம்மிடம் இருக்க வேண்டிய அளவு இருக்கிறதா? ஏன் வாயைத் திறக்க மறுக்கிறீர்கள்? தேவத் திட்டம் ஆவியின் கனியானால், கனியற்ற நிலை தேவனுக்கெதிரான போரில்லையா? சொல்லுங்கள். ஏன் மௌனம்!

அடுத்து, பிதாவே நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டுமென்று (யோவா 17:21) நம்முடைய இரட்சகர் கெத்சமனே தோட்டத்தில் மன்றாடினாரே, அந்த மன்றாட்டுக்கு நாம் உரிய மரியாதை கொடுக்கிறோமா? நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்! **நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக** அந்த ஒற்றுமை தேவை என்று சொல்லியுள்ளாரே, கவனித்தீர்களா? இன்றைக்கு உலகம் கிறிஸ்துவையும், அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையையும் அறிந்து, ஏற்றுக்கொள்ள வேண்டிய அளவு ஏற்றுக் கொள்ளாமலிப்பதற்கு கிறிஸ்தவர்களுக்குள்ளாக, கிறிஸ்துவின் சபையாருக்குள்ளாக நிலவும் ஐக்கியமற்ற தன்மை ஒரு முக்கியக் காரணம் என்று எப்போதாகிலும் உணர்ந்திருக்கிறீர்களா? இக்காரியத்தில் நாம் ஒரு மிகப் பெரிய போரை தேவ திட்டத்திற்கெதிராக நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை தயவு செய்து மறந்து விடாதீர்கள். எனக்கன்பான சகோதரனே, கனியற்ற வாழ்க்கைக்கும், ஒற்றுமையற்ற தன்மைக்கும் நாம் உடனடியாக முடிவு கட்டியாக வேண்டும், அது நம்மேல் விழுந்த கடமை.

அருமையானவர்களே, “இரு தரப்பிலும் நாசம் ஏற்படும்” என்று எடுத்துச் சொல்லப்பட்டபோது, தேவ நம்பிக்கையற்ற தேசத் தலைவர்களே போரைத் தவிர்த்திருக்கிறார்கள். அடுத்து, தேவ திட்டத்தோடு போர் வேண்டாமென்று சொன்னபோது, உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற சதுசேயர்களே, அந்தப் போருக்கு விலகிக் கொண்டார்கள். அப்படியிருக்கும் போது, தேவ ஆழ்ந்த பிடிப்பும், உயிர்த்தெழுதலில் நம்பிக்கையும் கொண்ட நாம், அவருக்கு எதிராகப் போரிடலாமா? நாம் என்ன, மெய்தேவ நம்பிக்கையுற்ற தேசத் தலைவர்களைக் காட்டிலும், உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத சதுசேயர்களைக் காட்டிலும், மோசமானவர்களா? நான் அப்படி நினைக்கவில்லை. தேவனுக்கு எதிராகப் போர் செய்கிறவர்களுக்கு வெற்றியும் இல்லை, வாழ்வும், விருத்தியும் இல்லையென்பது எப்பொழுதும் உங்கள் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கட்டும்.

ஆகவே, தேவ திட்டத்துக்கு நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுப்போம். தேவனுக்கெதிரான போரைத் தவிர்ப்போம். நித்திய ஜீவனை சுதந்தரிப்போம்! ஆமென்.

**S. ராஜநாயகம்.**

# உங்கள் சொந்த கிராமத்திலோ அல்லது பட்டணத்திலோ கிறிஸ்துவின் சபையை எப்படி ஆரம்பிக்க இயலும்?

கிறிஸ்துவின் சபை இல்லாத பட்டணத்திலோ அல்லது கிராமத்திலோ நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அங்கே நாமகரணக் கட்டடங்கலோ அல்லது மனித சபைகலோ இருக்கலாம், ஆனால் கர்த்தருடைய சபை இன்னும் ஸ்தாபிக்கப்படாமலிருக்கலாம். எனவே என்ன செய்வது என்று நீங்கள் யோசித்துக்கொண்டிருக்கலாம். ஏற்கனவே அப்படி இருக்கிற சபையில் நீங்கள் அங்கமாகி விடுவீர்களா? நீங்கள் அந்நிலையில் தொடர்ந்து இருந்து விடுவீர்களா? அல்லது கிறிஸ்துவின் சபை ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு இடத்திற்கு மாறிப் போய்விடுவீர்களா? இவையெல்லாம் முக்கியமான கேள்விகள், ஆகிலும் அவற்றிற்கு அவ்வளவு சுலபமாக பதில் வந்துவிடாது. சில ஆலோசனைகளை நான் கொடுக்கட்டும், நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரானது சாத்தியமே. நீங்கள் இருக்கும் பட்டணத்திலோ அல்லது கிராமத்திலோ ஒரு பிராந்திய சபையை ஸ்தாபிப்பதிலே முன்வகித்தாலும் சாத்தியமே. நீங்கள் எடுக்க வேண்டிய முயற்சிக்கு இதோ சில ஆலோசனைகள்.

1. உங்களுக்கென ஒரு வேதாமகத்தை வாங்குங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தை செய்வதில் ஆர்வம் காட்டினால், உங்களுக்கு ஒரு வேதப் புத்தகம் தேவை. அப்படி ஒரு வேதாகமத்தை வாங்கியபின் அதை வாசித்துக் கற்றுக்கொள்ளுங்கள். பிறகு கிறிஸ்து இன்றுள்ள மக்களுக்கு கொடுத்துள்ள கிறிஸ்துவின் பிரமாணம் அடங்கிய புதிய ஏற்பாட்டிற்கு அதிக கவனம் செலுத்துங்கள், அப்படி செய்வதன் மூலம் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும், எப்படி கர்த்தருடைய சபையில் அங்கத்தினராவது, எப்படி ஆராதிப்பது? கிறிஸ்துவ வாழ்க்கையை வாழ்வது போன்ற அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ளக்கூடும்.

2. நீங்கள் சத்தியத்திற்கு கீழ்படியுங்கள். நீங்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை

மனஷருக்கு முன்பாக அறிக்கை செய்து, ஞானஸ்நானத்தின் மூலம் (தண்ணீரில்) அடக்கம் பண்ணப்பட்டால், நீங்கள் இரட்சிக்கபடுவீர்கள். (மாற்கு. 16:16; மத்தேயு 10:32; அப் 2:38)

3. உங்கள் வீடுகளிலேயே ஆராதனை நடத்தத் துவங்குங்கள். உங்கள் குடும்பத்தார்களையும், நண்பர்களையும் அவ்வாராதனையில் கலந்து கொள்ள உற்சாகப்படுத்துங்கள். ஆராதனை வாரத்தில் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட வேண்டும். தேவனுக்கு பிரியமான முறையில் வேத வகுப்பும் (2தீமோத்தேயு 2:15) ஜெபமும், (அப்போஸ்தலர் 2:42) இசைக்கருவியில்லாமல் பாடுதலும் (எபேசி 5:19) உங்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்தின் நினைப்பூட்டுதலாக அப்பத்திலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் நினைப்பூட்டுதலாக திராட்சை ரசத்தையும், (மத்தேயு 26:26-28; 1. கொரிந்தியர் 11) கர்த்தருடைய பந்தியாக பங்குபெறப்பட வேண்டும். திராட்ச ரசம் கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கர்த்தர் சொன்னார். இறுதியாக, உங்கள் வரவுக்குத்தக்கதாக காணிக்கை கொடுக்கவேண்டும். (1 கொரி 16:2). உங்களுடன் கூடி வந்திருப் பவர்களும் ஒருவேளை காணிக்கை கொடுக்க விரும்பலாம். இந்தப் பணம் நேர்மையாக கையாளப்பட்டு கிறிஸ்துவின் சுவிஷேசப் பரவுதலுக்கும், ஏழை எளியோர் துயர் துடைக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த காரியங்களெல்லாம் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைதோறும் நடப்பிக்கப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 20:7)

4. உங்கள் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆராதனை நடத்துவதோடு அல்லாமல் நீங்கள் இருக்கும் பட்டணத்தின் பிற பகுதிகளிலும், கிராமங்களிலும் கூட ஆராதனைக் கூட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டும். இந்த கூட்டங்களில், யாராகிலும் கர்த்தருக்கு கீழ்ப்படியும் வரை பிரசாங்கம் செய்யும் கூட்டம் மாத்திரம் நடைபெறும். அப்படி கீழ்ப்படிவோரைக் கொண்டு (ஏற்கனவே அறிவித்திருந்தபடி) ஆராதனை நடத்தப்பட வேண்டும். ஆனால் ஜனங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் அல்லது புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் சபையில் எப்படி

அங்கமாவது என்பது பற்றியும், தேவனை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதிப்பது பற்றியும் அவர்கள் ஜீவிக்க வேண்டிய கிறிஸ்துவ ஜீவியத்தைக் குறித்தும் போதிக்க வேண்டும். இப்படி செய்வீர்களானால், உங்கள் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படும்.

5. உங்கள் தொழுகையிலும், பிரசங்கத்திலும், ஜீவியத்திலும் உண்மையுள்ளவர்களாயிருங்கள். தேவனுடைய சத்தியத்தை பரப்புவதில் இயன்றவரை செயல்படுத்துங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அங்கேயே கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக மாறலாம் என்பதை மனதில் வையுங்கள். இதற்குத் தேவையானதெல்லாம் கீழ்படிதலே.

**J.C. சோட்** **J.C. CHOATE**

## வேதாகமத்தில் சுவிசேஷத்திற்கு கொடுக்கப்படும் மறுபெயர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ஜீவ வார்த்தை | பிலிப்பியர் 2:16 |
| 2. | தேவனுடைய வார்த்தை | எபி. 4:12 |
| 3. | கர்த்தருடைய வசனம் | 1. தெச. 1:8 அப். 13:49 |
| 4. | கேள்விப்படுகிற வசனம் | எபி. 4:2 |
| 5. | ராஜ்யத்தின் வார்த்தை | மத் 13:19 |
| 6. | சுவிசேஷத்தின் வசனம் | கொலோ. 1:6 |
| 7. | கிருபையுள்ள வார்த்தை | அப். 14:3 |
| 8. | ஒப்புரவாக்குதலின் வார்த்தை | 2. கொடி. 5:18 |
| 9. | இரட்சிப்பின் வார்த்தை | அப். 13:26 |
| 10. | சிலுவையின் வார்த்தை | 1. கொரி. 1:18 |
| 11. | சத்தியத்தின் வார்த்தை | 2. கொரி. 6:6 |
| 12. | நீதியுள்ள வார்த்தை | எபி. 5:13 |
| 13. | ஆரோக்கியமான வார்த்தை | (2. தீமோ. 1:13) |

# "கிறிஸ்தவக் குடும்பங்களை கட்டுதல்"

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு புனிதமான ஸ்தாபனம்தான் குடும்பம் என்பது. (ஆதி.2;8-24). குடும்பங்கள் தோல்வியடையும்போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைக்குள்ள சமுதாயம் இளைத்துப்போன, பலவீனமான காயமுற்ற, உடைந்துபோன, குடும்பங்களையே பெற்றிருக்கிறது.

ஆதியிலிருந்தே தேவனுடைய திட்டமானது, ஒரு ஆண் ஒரு பெண்ணோடு தன் வாழ் நாள் முழுவதும் சேர்ந்திருக்க வேண்டுமென்பதே. "அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்" (ரோமர். 7;2).

இன்றைக்கு குடும்பங்கள் பிசாசினால் தாக்கப்பட்டுள்ளது. சாத்தானோடு போர் செய்து, நம்முடைய குடும்பத்தை காப்பாற்ற என்ன செய்யவேண்டுமோ அதை நாம் செய்ய முயல வேண்டும். கிறிஸ்தவக் குடும்பங்கள் எப்படிக் கட்டப்படவேண்டும் என்பதை வேதத்தின் துணை கொண்டு பார்ப்போம்.

## கிறிஸ்தவக் குடும்பங்கள் அர்ப்பணிப்பு என்ற குணத்தின் மீது கட்டப்படவேண்டும்

முதலாவதாக, கணவனும், மனைவியும் தங்களை தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். (1.கொரி. 15: 1-4; மாற்கு. 16:16). அத்தோடு ஒருவருக்கொருவர் தங்களை அர்ப்பணிக்க பழகிக் கொள்ள வேண்டும். ஒரு குடும்பம் மகிழ்ச்சியாகவும், எல்லா நலமுடனும் வாழ்ந்து சிறந்த கிறிஸ்தவக் குடும்பமாக திகழ வேண்டுமானால் அதிகப்படியான அர்ப்பணிப்பு உணர்வு அவசியம். பலமான ஒரு குடும்பத்தை நீ கட்டவேண்டுமானால் உன்னுடைய உடமைகள் மற்றும் உன்னையே அர்ப்பணிக்க வேண்டும். "சுயநலம்" என்பது அர்ப்பணிப்புக்கு ஓர் விரோதியாகும்.

## தேவனுக்கு சேவை செய்வதின் மேல் கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டப்படவேண்டும்

கிறிஸ்தவக் குடும்பங்கள் எப்போதுமே ஆராதனையில் கலந்து கொள்ளும் பழக்கம் உடையதாகவே இருக்க வேண்டும். "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லவேண்டும்" (எபி. 10:25). பெற்றோர்களாகிய நாம் ஒரு ஞாயிறு

ஆராதனை, ஒரு வேத பாட வகுப்பு இவைகளை தவற விடும்பொழுது, அது நம் பிள்ளைகள் கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமானதல்ல என்று நினைக்குமளவுக்கு தவறான முன் உதாரணமாகப் போய்விடுகிறது.

ஜெபமும், வேத வாசிப்பும் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தை கட்ட முக்கியமான பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் கட்டாயமாக கீழ்கண்ட காரணங்களைக் கொண்டு தேவனை நினைக்க வேண்டும்.

1. தேவன் என்றும் மாறாதவர் (சங்கீதம் 90 2)
2. தேவன் சர்வ வல்லவர் (ஆதி. 1:3)
3. தேவன் நல்லவர் (யாக்கோபு 1:17)
4. தேவன் பரிசுத்தமுள்ளவர் (1. பேதுரு. 1:16)
5. தேவன் எங்கும் நிறைந்தவர் (சங்கீதம். 139)

முதல் குடும்பத்தை ஏற்படுத்திய நித்திய தேவனை ஆராதிக்காத எவரும் பலமுள்ள, சமாதானமான, வெற்றிக்கரமான குடும்பத்தை இப்பூமியில் கட்டவே முடியாது.

**ஒருவரையொருவர் பாராட்டுவதன் மூலம் கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டப்படுகிறது.**

மனித இனத்திற்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளில் பிரதானமானது மற்றவர்களால் பாராட்டப்படுவது. கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவருக்குமே இத்தேவை பொதுவானது.

கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள் போன்றவர்களை பாராட்டிப் பழகிக் கொள்ள வேண்டும். "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்" (மத். 7:12). பாராட்டுதலை எப்படி வெளிக்காட்டுவதென்றால், இந்த தங்கச் சட்டத்தை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதன் மூலமேயாகும். அப்போது அது தானாக வேலை செய்யும்!

**"கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பின் மீது கட்டப்படவேண்டும்"**

ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திற்கும் அன்பு என்பது மிக மிக முக்கியமான ஒரு குணாதிசயமாகும். "ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4:32). "மன உருக்கம்" என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. யார் ஒருவர், சாந்தமும், அமைதியும், கரிசனையும், புரிந்துகொள்ளுதலுடன் இருக்கிறார்களோ அவர்கள் குடும்பத்தை நன்றாக கட்ட முடியும். கணவன்மார்கள் விசேஷமாக கண்டித்து அறிவுகூறுபவராக இருக்க வேண்டும். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள், அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" (கொலோ. 3:19). எளிமையான இரக்கம், மனதுருக்கம் ஆகிய இரண்டும் பலமான குடும்பத்திற்கு மிகவும் அவசியம்.

"**கிறிஸ்தவக் குடும்பங்களுக்கான சில ஆலோசனைகள் :**

1. ஒருவருக்கொருவர் நண்பர்களைப் போல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும்.
2. ஒவ்வொருவர் உணர்வுகளையும் மதித்து நடக்க வேண்டும்.
3. ஒருவரிலொருவர் அன்பு கூற வேண்டும்.
4. குடும்பத்தில் உள்ளவர் ஒன்றாய் இருக்க நேரத்தை ஒதுக்க வேண்டும்.
5. குடும்பத்தில் உள்ள அனைவருக்காகவும், தேவனுக்கும் ஒவ்வொருவரும் தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்ய வேண்டும்.
6. அன்பும், மனதுருக்கமும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும்.
8. ஒருவரையொருவர் பாராட்டிப் பழக வேண்டும்.
9. ஒருவருக்கொருவர் செவி கொடுக்க வேண்டும்.
10. பிற குடும்பங்களும் பரலோகத்திற்குச் செல்வதற்கு உதவி செய்ய வேண்டும். இப்படி பலமான குடும்பங்கள் இருக்கும்பொழுது பலமான சபைகளை உருவாக்க முடியும்.

**ரேச்சல் ராஜநாயகம்.**

# ரோமைப் பற்றி ...

கி.மு. 753வது ஆண்டு ரோம் நகர ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. அது கி.மு. 265-ல் இத்தாலி தேசம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. 20 வருடங்களாக தன்னை எதிர்த்து வந்து கார்த்தாகே என்ற ராஜ்யத்தை கி.மு. 146ம் வருடத்தில் கைப்பற்றியது. கி.மு. 63-ல் பாம்பி என்கிறவர் பாலஸ்தீனா முழுமையையும் தன்வசப்படுத்தினார். கலாத்தியா மற்றும் பிரிட்டன் நாடுகளை ஜூலியஸ் சீசர் தன் ஆட்சிக்கு கீழ்ப்படுத்தினார். முதல் நூற்றாண்டுவாக்கில், வடக்கில் தனுபீ, தலீனிலிருந்து, தெற்கே சகாரா வரைக்கும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து, மேற்கே யூப்ரடிஸ் நதி வரைக்கும் ரோம் தனது ஆளுகையை ஏற்படுத்தியது.

# உண்மைகள் உறங்காது

கதிர்களால் பிறர் கவனத்தை ஈர்க்கும் கதிரவனை, முகில் கூட்டத்தால் மூடியே வைத்திருக்க முடியுமோ! அலைகளால் ஆர்ப்பரிக்கும் ஆழிகளை போர்வையிட்டு மூடி மறைக்கத்தான் கூடுமோ ! வானமும், வையகமும் அழிந்து போனாலும், அழியா தேவ வார்த்தையை யாரேனும் பொய்யாக்கிவிடத்தான் முடியுமா? ஒருக்காலும் முடியாது என்பது போலவே, உண்மையை குழி தோண்டி புதைப்பினும், சதி செய்து மறைப்பினும் அது என்றைக்கும் உறங்காது. பலநாள் உறங்கிக் கிடக்கும் எரிமலை ஒரு நாள் வெடித்துக் கிளம்புவது போல் தடைகளை தகர்த்து, சதி வலையை கிழித்துக் கிளம்பி வரும் என்பது திண்ணம். அப்படியாகும்போது உணராதவர்களின் உள்ளம் உறைந்து போகும். உளையிட்ட மெழுகாய் கரைந்து போகும்.

வாலிபர்களே! நம்மைப் போலவே ஈசாயின் இளைய புதல்வன் தாவீதும், “இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்: உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்” (சங். 12:1) என்று அங்கலாய்க்கிறான். உண்மையுள்ளவர்கள், குறைவாக இருந்தாலும் உண்மைகள் வெளிப்படுவதை விரும்பாதவர்கள் நிறைந்திருந்தாலும், ஒரு நாளில் அது உயிர்த்தெழுந்து நின்று, தன்னை வெளிப்படுத்தியே தீரும் என்பதை நீங்கள் வேதத்தின் துணை கொண்டு அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இம்முறை இத்தலைப்பு இப்பகுதியை அலங்கரித்து நிற்கிறது. உணர்ந்து படித்து உண்மையை ஏற்றிடுக.

## சற்றொப்ப 22 ஆண்டுகள் உறங்கிய உண்மை...

யாக்கோபின் முதிர்வயதிலே மலர்ந்த யோசேப்பு, தன் தந்தையின், சிந்தையெல்லாம் நிறைந்து, அலாதி பிரியத்திற்குரிய மகனாக திகழ்ந்தான். அரிக்கட்டுகள், சூரிய, சந்திர நட்சத்திரங்கள் தன்னை வணங்கிய சொப்பனத்தை செப்பியதால், உடன்பிறப்புக்களே, இவன் ஊன் விட்டு உயிர் பிரிய வேண்டுமென்ற எண்ணம் கொள்ள ஆளானான். தந்தையின், மந்தைக்கு இரை தேட இடையர்களான, யாக்கோபின் புதல்வர்கள், புறப்பட்டுப் போனார்கள். ஆடு மேய்க்கப்போன மகன்கள், ஆரோக்கியமாக இருக்கிறார்களா என்ற செய்தி அறிய விரும்பிய தந்தை யோசேப்பை அழைத்து, உன் சகோதரர்கள் நன்றாக பிழைத்திருக்கிறார்களா, ஆடுகள், மேடு பள்ளங்களில் விழுந்து பழுதடையாமலிக்கிறதா என்று கண்டு வா, நல்ல செய்தி கொண்டு வா என்று கட்டளையிட்டான் கடையனுக்கு.

யோசேப்பு, சீகேமிலே சகோதரர்கள் இருக்கிறார்கள் என்று, சீக்கிரமாய் அங்கு சென்றான், அவர்கள் அவ்விடம் விடுத்து தோத்தானுக்கு போய்விட்டார்கள் என்ற செய்தி அறிந்து அவ்விடத்திற்கு போனான். தூரத்திலே அவன் வர கண்ட சகோதரர்கள், சுமார் 75 மைல்கள் தன் சகோதரர்களைக் காண மூச்சிரைக்க வந்த அவனின் மூச்சு, நின்று விட வேண்டுமென சதியோசனைபண்ணினார்கள். ரூபனின் இரக்க மனம் அவனை இந்த யோசனைக்கு தப்புவித்தது. இஸ்ரவேல் இஷ்டமாய் உடுத்துவித்த பலவர்ண அங்கி யோசேப்பைப் பிரித்தது. சொப்பனத்தின்படி வணங்க வேண்டியவர்கள், அக்கனவுக்கு இணங்காததால் குழியில் போட்டார்கள், அதுவும் பாசமற்ற படுபாதக நெஞ்சைப்போலவே தண்ணீரில்லாத வெறுங்குழியில் யோசேப்பை போட்டார்கள். பவுலைப் போலவே சத்தியத்தைச் சொன்னதால் இவனும் சத்துருவானான். (கலா. 4:16)

யோசேப்பு, இஸ்மவேலர்களுக்கு விற்கப்பட்டு எகிப்திற்கு அடிமையாக கொண்டு போகப்பட்டான். மூச்சிரைக்க வந்தவனின் சொப்பனப் பேச்சு இத்தோடு முடிந்தது. அடிமையாக இவன் செல்கிறான், இவனின் அடிபணிவோம் என்ற சொப்பனத்தை 20 வெள்ளிக்கு விற்று அடியோடு சாய்த்துவிட்டோம், உண்மையை மாய்த்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொண்டு, பலவர்ண அங்கியை பலமான ஆதாரமாக்கி, பட்சித்துப் போட்டது துஷ்டமிருகம் என்ற பொய்யை, மெய்யாக்கி யாக்கோபை கலங்கப் பண்ணினார்கள். ஆறுதல் அடையாமல் அனுதினமும், கண்ணீர் சிந்தி, துக்கத்தோடே என் குமாரனிடத்தில் சேருவேன் என்று விதைத்ததை அறுத்து அழுதுகொண்டிருந்தான் யாக்கோபு.

யாக்கோபு, தனது வாலிப வயதிலிருக்கையில் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க வேண்டும், என்ற அன்னையின் ஆசையை நிறைவேற்ற, தன் தாயின் தவறான ஆலோசனைக்கு செவிமடுத்து, தன் தகப்பனான ஈசாக்கை வஞ்சிக்கும்படி அண்ணனின் ஆடை அணிந்து, ரோமம் அண்ணனுக்கு அதிகமிருந்ததால் ஆட்டுத்தோல் போர்த்தி, ருசியான ஆகாரம் கொண்டு அவரை ஏமாற்றி அன்றே சதி விதையை விதைத்தான், இன்றோ தனது குமாரர்களால், தனது பிரிய குமாரனின் அங்கியில் ஆட்டை அடித்து அதன் ரத்தத்தை தெளித்து ஏமாற்றப்படுகிறான். ஒன்றை விதைத்து, 10 மடங்காக அறுக்கிறான். வாலிபர்களே, நாமும் எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம் என்பதற்கு இவனை விட எடுத்துக்காட்டு வேறில்லை. தான் யோசேப்புக்கு ஆசையாக உடுத்தின பலவர்ண அங்கி, இப்பொழுது அங்கலாய்ப்பாக மாறிப்போனது. காலங்கள் கடந்தது, உண்மை உறங்கிவிட்டது. எல்லாம் மறைந்தே போனது என்று நினைத்திருக்கும்

யாக்கோபின் பிள்ளைகளுக்கு எழில் கொண்டு, நிழல் தரும் தருவாக எகிப்தில் அவ்வுண்மை வளர்ந்து வருகிறது என்ற உண்மை ஒரு ஜாண் இதயத்தில் பல ஜாண் ஊனம் கொண்ட அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்காது.

பஞ்சம் வந்தது, தானிய இருப்பும் கொஞ்சமானது, எகிப்தில் கிடைக்கிறது தானியம் என்று கேள்விப்பட்டு அங்கு சென்றார்கள். அதன் பின்பு யோசேப்பு தன்னை வெளிப்படுத்தினான். யாக்கோபுவிடம் எந்த நாவு, இறந்தான் யோசேப்பு என்று செய்தி சொன்னதோ, அதே நாவு, "யோசேப்பு உயிரோடிக்கிறான், அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான் என்று அவனுக்கு அறிவித்தது" (ஆதி. 45 ;26). எரிமலை வெடித்தது, புதைக்கப்பட்ட உண்மை உயிர்த்தெழுந்து உயர்ந்து நின்றது. மறைக்கப்பட்ட உண்மை திரைகிழித்து, கெம்பீரமாக வெளிப்பட்டது. யாக்கோபின் இருதயம் மூர்ச்சை அடைந்தது, ஆங்கிய வேதாகமம் இதை "**யாக்கோபின் இருதயம் அப்படியே நின்று போயிற்று**" என்று எழுதியிருக்கிறது. அவர்களை நம்பமுடியாமல் அவனிருதயம் நின்று போயிற்று. விந்தையைப் பாரீர் பொய்யை நம்பும் யாக்கோபு, மெய் உரைக்கப்பட்டபோது நம்ப முடியாமல் தவிக்கிறான். சில ஆதாரங்களை கண்டு உயிர்பிழைக்கிறான்.

சற்றொப்ப 22 ஆண்டுகள், தன் மகன்களால் வஞ்சிக்கப்பட்ட யாக்கோபு, உண்மை அறிவிக்கப்பட்டபோது ஏக்கத்துடன் கூறும் வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள். "என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனை பார்ப்பேன் என்றான்" (ஆதி. 45;28). இஸ்ரவேலின் முதிர்வயதின் முதிர்ந்த சொற்கள் உறுதியாக உதிர்கிறது. "இதுபோதும்" நான் பொய்யை நம்பினது போதும், என் தகப்பனை நான் ஏமாற்றியதற்கு நான் அனுபவித்தது போதும், என் அன்பான குமாரன் யோசேப்பை காணாமல் நான் தவித்த நாட்கள் எல்லாம் போதும், நான் துக்கத்தோடே என் கண்களை மூடுவேன் என்று நினைத்தது போதும், எல்லாமே போதும், ஒன்று செய்வேன் மரணமடையும் முன்னே போய் அவனைப் பார்ப்பேன் என்று உறுதி பூண்டான். ஆங்கில வேதாகமத்தில் "I Will go" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நிச்சயம் நான் போகவே போவேன் என்ற அர்த்தத்தை அது தருகிறது.

வாலிபர்களே! நாமும் நமது வாழ்க்கையில் வெகு நாட்களாக இது தான் உண்மை என்று நம்பி காரியங்களை நடத்தியிருக்கலாம். நாம் தேவனுக்கு பிரியமாக நடக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். வேத வசனத்தின்படிதான் நடக்கிறோம் என்று உறுதியாக நம்பி ஒரு கூட்டத்தோடு ஐக்கியம் வைத்திருக்கலாம். ஆனால் உண்மை வேறு விதமாக இருக்கும். அப்படி இருப்பதாக் நமக்கு அறிவிக்கப்பட்டால்,

யாக்கோபைப் போல முதலில் இருதயம் நின்று போகும் அளவுக்கு வியாகுலப்பட்டாலும், பின்பு, தன் மகன்கள் பேசினவார்த்தையையும், யோசேப்பு அனுப்பின வண்டிகளையும் கண்டு நிதானித்து, இப்படி, "நான் போவேன்" என்று கூறுவது போலவே நாமும் தேவ வசனத்திற்கு செவி சாய்த்து உண்மையை ஏற்றுக்கொண்டு உறுதியாக அதற்கு ஏற்றபடி காரியம் நடப்பிக்க முடிவு செய்ய வேண்டும்.

எனக்கன்பான வாலிப நெஞ்சங்களே! ஏறக்குறைய 22 ஆண்டுகளாக உறங்கிக்கிடந்த உண்மை உயிர்பெற்ற போது, உறுதி எடுத்த இஸ்ரவேல் அத்தோடு நிறுத்தாமல் உடனே காரியத்தில் இறங்கினான். அடுத்து வசனத்தை நாம் வாசிக்கையில், "தனக்கு உண்டான யாவையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுப்பட்டான்" என்று எழுதியிருக்கிறது. யாக்கோபு, தன் பிரியமான குமாரன் மீது வைத்த அன்பு அவனை உடனே புறப்பட செய்தது, தாமதம் செய்யாமல் இஸ்ரவேல் போர்கால நடவடிக்கைகளை செய்தான். நாமும் அப்படியே உண்மைகளை உணரும்போது அதை அசட்டையாக நினைக்காமல் காரியங்களை நடத்துவோம். யாக்கோபு தன் குமாரனைப் பார்க்கும்படி என்ன ஆவலாக சென்றிருப்பாரோ அப்படியே நாமும் ஆவலாக உண்மைகளை உணருவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# பேதுரு கள்ள தீர்க்கதரிசிகளைப் பற்றி சொல்லுகிறபோது...

1. 2. பேதுரு. 1;16 :- கள்ளத் தீர்க்கதரிசிகள் **தந்திரமான** கட்டுக்கதைகளைப் போதிப்பார்கள்.
2. 2. பேதுரு. 2:3 :- அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் **தந்திரமாய்** நுழையப் பண்ணுவார்கள்.
3. 2. பேதுரு. 2:3 :- **தந்திரமான** வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்.
4. 2. பேதுரு. 2:14 :- அவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களைத் **தந்திரமாய்** பிடித்துக் கொள்ளுவார்கள்.
5. 2. பேதுரு. 2:18 :- மாம்ச இச்சைகளினாலே **தந்திரமாய்** பிடிப்பார்கள்.

# மத்தேயு ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **மத்தேயு அப்போஸ்தலன்**

காலம் : **ஏறக்குறைய 50-70 கி.பி.**

## இந்நூலைப்பற்றி...

1. இயேசு கிறிஸ்து, மேசியாவாகவும், இராஜாவாகவும் இருக்கிறார் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்நூலை ஆசிரியர் எழுதுகிறார்.

2. "பரலோக இராஜ்ஜியம்" என்கிற வார்த்தை இந்நூலில் 33 முறை இடம் பெற்றிருக்கிறது.

3. இந்நூல் ஒரு யூதனால், யூதர்களுக்கென்று, ஒரு சிறந்த யூதனைப் பற்றி எழுதியிருக்கிறது.

4. இந்நூலின் முதல் 4 அதிகாரங்கள் வரிசை கிரமமாகவும், 5-13 அதிகாரங்கள் தலைப்பின்படியாகவும், மீண்டும் 14-28 அதிகாரங்கள் வரிசை கிரமமாகவும் இடம் பெற்றிருக்கிறது.

5. இயேசுக் கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்று 9 முறை மத்தேயு குறிப்பிடுகிறார்.

6. யூதர்களுக்கென்று இந்நூல் எழுதப்பட்டாலும், புறஜாதிகளை மத்தேயு புறக்கணிக்கவில்லை (1:3,5, 8:11,12 15:12-28 22:8-10 28:18-20)

## இந்நூலின் செய்தி...

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மேசியா இயேசுதான் என்று வலியுறுத்துகிறது.

2. ஆபிரகாமுக்கும், தாவீதிற்கும் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்தான் சுவிசேஷம் என்று எடுத்துரைக்கிறது.

# நோவா தாத்தாவின் கீழ்ப்படிதல்

எனக்கன்பான சிறு தம்பி, தங்கைகளே, மீண்டும் உங்களை சந்திப்பதில் எல்லையில்லா மகிழ்ச்சி கொள்கிறேன். நாம் இச்சிறுபிராயத்தில் இருந்தே தேவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படிந்து இருக்க வேண்டு மென்பதால் இம்முறை நோவா தாத்தாவிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம் வாருங்கள்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஜலப்பிரளயம் பற்றிய விவரிப்பில், நோவா பற்றியும், தேவன் கொடுத்த கட்டளைக்கு அவர் எப்படி செயல்பட்டார் என்பது பற்றியும் நமக்கு பயன்படக்கூடிய காரி யங்கள் சொல்லப் பட்டிருக்கிறது. முதலாவதாக ஆதி. 6:22ல் தேவன் கட்டளை கொடுத்தபடியெல்லாம் நோவா செய்து முடித்தார் என்றும். மறுபடியுமாக ஆதி. 7:5 நோவா தனக்கு கர்த்தர் கட்டளையிட்ட படியெல்லாம் செய்தார் என்றும் உள்ளது.

இந்த இரண்டு வசனங்களும் நோவா தாத்தா தேவனுக்கு **கீழ்ப்படிவதற்கும், அப்படி கீழ்ப் படிவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்தார் என்றும் சொல்லுகிறது.**

உதாரணமாக தேவன் நோவாவை கொப்பேர் மரத்தால் பேழை செய்யச் சொன்னார். நோவா வேறு மரத்தில் செய் திருந்தால் என்ன ஆயிருக்கும்? தேவன் அதை ஏற்றுக் கொண்டிருப்பாரா? மூன்று அடுக் குகளுக்கு பதிலாக நான்கு அடுக்கு வைத்திருந்தாலோ, ஒரு கதவுக்கு பதிலாக, ஐந்து கதவுகள் வைத்திருந்தாலோ அல்லது ஒரு ஜன்னலுக்கு பதிலாக பத்து ஜன்னல் வைத்திருந்தாலோ என்ன ஆயிருக்கும்?

இங்கே, இரண்டு கேள்விகள் மனதுக்குள் எழுகின்றன.

1. நோவா தேவனுக்கு கீழ்ப்படிந்தவராயிருந்திருக்க முடியுமா?

2. நோவா தாத்தா காப்பாற்றப் பட்டிருப்பாரா?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் **"இல்லை"**, என்பதுதான். நாம் தேவனுக்கு விரோதமாக காரி யங்களை செய்யும் பொழுதும், நாம் தேவனுடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்தி தேவன் நம்மை எதை செய்யச் சொல்லுகிறாரோ அதற்கு பதிலாக நாம் விரும்புவதை செய்யும்போதும் நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போய் அவருக்கு விரோதமாய் பாவம் செய்கிறோம். தேவன் நம்மை எதையாவது செய்யச் சொல்லும்பொழுது நாம் எப்படி செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறாரோ அதன்படியே செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தேவ னுக்கு பிரியமாய் சிறு பிள்ளை களாகிய நாம் இருக்க முடியாது.

இந்தச் சிறு பிராயத்திலிருந்தே அப்பழக்கத்தை நாம் கடைபிடிக்க வேண்டும்.

தேவன் உங்களையும், என்னையும் ஆசீர்பதிப்பார்.

**R. ABEL RODGER NAYAGAM.**

# மறைந்திருக்கும் பாவங்கள்

**மா**ம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். (2கொ. 7:1) நாம் ஒரு பரிசுத்தமான ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருப்பதாக நம்மை சுற்றியுள்ள மக்கள் நினைத்தாலும், நாம் நம்முடைய ஆவியில் கர்த்தருக்குப் பிரியமற்ற ஒரு மனப்பாங்கை பெற்றிருக்கக் கூடும். ஆவிக்குரிய பாவங்கள் இருதயத்தில் மறைந்திருப்பதாலும் அவற்றை மற்றவர்கள் பார்க்க முடியாது என்பதாலும் அவை நம்முடைய செயல்களில் வெளிப்படும் வரை நாம் அவற்றைப் புறக்கணிக்கிறோம்.

பாவத்தின் இந்த இரண்டு தன்மைகளை தாவீது ராஜாவின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறது. அவன் பத்சேபாலின் மீது கொண்ட இச்சையினால் விபச்சாரத்தையும் கொலையையும் செய்தான். (2சாமு 11:2-4) (14-15) தாவீது உரியாவுக்கு முன்பாக தன் பாவத்தை மறைத்து நல்லவனைப் போல் பேசினான். ஆனால் தாவீதின் இருதயத்திற்குள் பாவமும் கொலை வெறியும் மறைந்து கிடந்தது. தாவீது தன் இருதயத்திலே நினைத்தது போலவே போர்களத்தில் உரியா கொலை செய்யப்பட்டான். இப்பேர்ப்பட்ட பாவத்தைக் குறித்து யாக்கோபு கூறுகிறார் (யாக் 1:14.15) அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்.

தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் என்று வேதம் சொல்லுகிறது. தாவீது தன் பாவத்தை மறைத்ததினாலே தன் சொந்த வாழ்க்கையில் கடுந்துன்பத்தை அனுபவித்தது மட்டுமல்லாமல் இஸ்ரவேல் தேசத்திற்கே நிந்தையை உண்டாக்கினான். பின்பு பல வருடங்களுக்குப் பிறகு இஸ்ரவேல் தேசத்தில் ஜனத் தொகையை கணக்கெடுக்கும்படி சாத்தான் அவனை ஏவியபோது தாவீது அதற்கான கட்டளையை கொடுத்தான். (1நா 21:1.6) இன்று மெய்க் கிறிஸ்தவத்தில் அநேக சகோதர சகோதரிகள் தாவீதைப் போல தன் சகோதர சகோதரிகளுக்கு விரோதமாய் எழும்பி அவர்களுக்கு முன்பாக அன்பு

செலுத்துவது போல உதட்டளவில் அன்பு செலுத்தி உள்ளத்திலே பகை என்னும் பாவத்தை மறைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். இப்பேர்பட்ட சகோதர சகோதரிகளை குறித்து யோவானின் மூலமாக ஆவியானவர் கடுமையாய் சொல்வதைக் கேளுங்கள் (1யோ 2:11) தன் சகோதரனை பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். என்றும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் என்கிறார் (1யோ 3:15)

உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயிருக்க வேண்டாம் என்கிறார் (1பே 4:15) அப்போஸ்தலனாகிய பேதுரு. இஸ்ரவேல் தேசத்தில் ஜனத் தொகையைக் கணக்கெடுக்கும்படி சாத்தான் தாவீதை ஏவியபொழுது அதற்கான கட்டளையைக் கொடுத்தான். அவனுடைய இந்தச் செயல் குற்றமற்றதாகத் தோன்றினாலும் அது தேவனுக்குப் பிரியமாயிருக்கவில்லை (I நா 21 :7.8) ஏனென்றால் தாவீது தன்னுடைய ராணுவ பெலத்தைக் குறித்து பெருமையடைந்தான். அவனுடைய வாழ்க்கையின் பல கட்டங்களில் அவனை அற்புதமாக தப்புவித்த தேவனை முழுமையாக சார்ந்துக் கொள்ளாமல் தன்னுடைய சொந்த பெலத்தை நம்பினான். ஆகவே, தேவன் தாவீதுக்கு தோல்வியையும்,

## அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதலாம் நிருபத்தில் பொய்யன் என்று யாரைக் குறித்துச் சொல்லுகிறார்?

1. 1.யோவான் 1:6 :- இருளிலே நடக்கிறவர்களாயிருக்கிறவன் சத்தியத்தின்படி நடவாததால் **பொய்யன்** என்கிறார்.
2. 1. யோவான் 2:22 :- அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும் கற்பனைகளை கைக்கொள்ளாதவன் **பொய்யன்** என்கிறார்.
3. 1. யோவான். 2:22:- இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனே **பொய்யன்** என்று சொல்லுகிறார்.
4. 1. யோவான். 4:20:- தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லி தன் சகோதரனிடத்தில் அன்பு கூறாதவனை **பொய்யன்** என்கிறார்.

அவமானத்தையும் நிந்தைகளையும் ஏற்படுத்தினார். அதைக்காட்டிலும் தாவீதினுடைய பெருமைக்கு எதிர்த்து நின்றார்.

ஒருவன் பெருமைப் பாராட்ட வேண்டுமானால் தேவனைக் குறித்தே பெருமைப் பாராட்ட வேண்டும். நாம் பாவத்தை முழுமையாக வென்றுவிட்டதாக மற்றவர்கள் நினைக்கலாம். ஆனால் நாம் ஆவிக்குரிய பாவங்களுக்கு குறிப்பாக பெருமைக்கு விலகியிருக்க வேண்டும். அவை நமது வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் கூட தடுமாறி விழச் செய்யும். பெருமை என்னும் பாவக் கல்லின் மேல் அநேகர் இடறிவிழுந்து கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அநேகர் தன் இருதயத்திலே சகோதர, சகோதரிகளிடத்தில் இருதயத்திலே பாவத்தை மறைத்துக் கொண்டு (தாவீதைப் போல) உதட்டளவில் பேசுவதைப் பார்த்தால் வேதனையாகவும், வெட்கப்பட வேண்டிய காரியமாகவும் இருக்கிறது. இவர்களிடத்தில் தேவ அன்பு எப்படியிருக்கும்? நிச்சயமாக இருக்க வாய்ப்பே இல்லை. கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயில் பிறக்கக் கூடாது என்று ஆவியானவர் நினைப்பூட்டுதலை படித்தும் பயனில்லாதவர்களாயிருக்கிறார்கள். தங்களை முக்கியஸ்தர்கள் என்று சொல்லுகிற இவர்கள் தான் தங்களுடைய பாவத்தை மறைக்க மற்றவர்கள் மீது பாவத்தை சுமத்திவிட்டு மாய்மாலம் பண்ணுவதைப் பார்க்கும்பொழுது வேதனையாக இருக்கிறது. நம்மிடத்தில் அநேகப் பாவங்களை மறைத்துக்கொண்டு மற்றவர்களைப் பாவிகள் என்றும் அவர்கள் சரியில்லை என்றும் தூற்றித் திரிந்துக்கொண்டு இருக்கிறோம். இப்பேர்ப்பட்ட மக்களைதான் அனேக ஊழியர்கள் அவர்களை கடிந்துக்கொண்டு கண்டனம் பண்ண மனதில்லாமல் தனக்கு சாதகமாக வைத்துக்கொண்டு சபையின் பரிசுத்தத்தையே கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், அவர்களைக் கடிந்துக்கொண்டால் நம்முடைய பாவம் வெளிப்பட்டுவிடுமே என்ற பயம் ஒரு பக்கம். அவர்கள் விலகி விடுவார்கள் என்ற கவலை மறுபக்கம். அப்போஸ் தலனாகிய யோவான் காலத்திலும் இப்பேர்ப்பட்ட மக்கள் இருந்திருக்கிறார்கள் அவர்களைக் குறித்து சொல்லுகிறார் (II யோ) வசனம் 9.10) நா்ன் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனபடியால் நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்து வருகின்ற

கிரியைகளை நினைத்துக்கொள்வேன். அவன் இப்படி செய்து வருவதும் போதாமல் தான் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிக்கிறதுமன்றி ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடை செய்து, சபைக்குப் புறம்பே தள்ளுகிறான். தொடர்ந்து பேதுரு கூறுகிறார் (1பே 2:1-2) இப்படியிருக்க கர்த்தர் தயையுள்ளவரென்பதை ருசித்துப் பார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும் சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிடுங்கள் என்று எச்சரிக்கிறார். இவைகளை நாம் எப்படி ஒழிப்பது? எப்படியென்றால் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் (தேவனுடைய வார்த்தையை) கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயிருப்போமானால் மேற்சொன்னவைகளை நிச்சயமாக நம்மால் ஒழிக்க முடியும் (யாக் : 1:22)

ஆகவே, அன்பான தேவ ஜனமே இதை வாசிக்கும் தேவப்பிள்ளைகளே, தன் இருதயத்திலே பாவங்கள் மறைந்திருக்குமேயானால் இனி அந்தப் பாவங்களை இயேசுவின் மூலமாய் தேவனிடத்தில் அறிக்கைசெய்து விட்டு விடுங்கள். விடுவீர்களானால் தேவனிடத்தில் இரக்கம் பெற்று நித்திய வாழ்வை (நித்திய ஜீவனை) அடைய இயேசு கிறிஸ்து பிதாவினிடத்தில் அப்பேர்ப்பட்ட மக்களுக்காக (சகோதர சகோதரிகளுக்காக) பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

**யோசுவா செல்வம்**

## இயேசுகிறிஸ்து பூமியில் மனுஷனாக பிறக்கக் காரணம் என்ன?

1. பிசாசின் வல்லமையை அழிப்பதற்காக (எபி. 2:14)
2. மரண பயத்தை நீக்கும்படியாக (எபி. 2:15)
3. பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகும்படியாக (1. யோவான். 2:2)
4. சோதனையில் உதவி செய்யும்படியாக (எபி. 2:18)
5. பாவிகளை இரட்சிக்கும்படியாக (லூக்கா 19:10)

# அப்போஸ்தலர்களின் மாதிரியே ஞானஸ்நானத்தின் நடைமுறையில் பின்பற்றப்படுகிறது.

**பு**திய ஏற்பாட்டின் போதனைகளில் ஞானஸ்நானத்தைக் குறித்த போதனையை காட்டிலும் வேறெதிலும் அதிக முரண்பாடுகள் தோன்றுவதில்லை. புதிய ஏற்பாடு அதனை தெளிவாக விளக்காத காரணத்தினால் அல்ல. மனிதர்களால் அதன் போதனைகளை சரியாக புரிந்து கொள்ளாமல் இருப்பதினால் தான் இவ்வாறு தோன்றுகிறது. நாம் இந்த தலைப்பைக் குறித்து ஆராய்ச்சி செய்வோமானால், தேவனே வேதாகம உபதேசங்களின் மூலம் ஞானஸ்நானத்தை ஏற்படுத்துகிறவராய் இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒருவன் ஞானஸ்நானத்தைக் குறித்த புதிய ஏற்பாட்டின் உபதேசம் முக்கியமானதல்ல என்றால், புதிய ஏற்பாட்டின் உபதேசத்தில் வேறு எதை முக்கியமானது என்று எப்படி ஒருவன் விவாதிக்கவும் விளக்கவும் முடியும். ஞானஸ்நானத்தின் செயல்பாட்டையும் நோக்கத்தையும், கர்த்தர் தமது வார்த்தையின் வாயிலாக நமக்கு விளக்குவாராக.

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானஸ்நானம் என்றால் ஒரு நபரின் மீது தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஒரு நபரின் மீது தண்ணீரை ஊற்றுதல் அல்லது ஒருவரை தண்ணீரில் மூழ்கச் செய்வது என்றும், அநேகர் இம்மூன்று வழியில் ஏதேனும் ஒன்றை செய்வதே ஞானஸ்நானம் என்றும் நினைத்துக் கொள்கின்றனர். சில ஆங்கில அகராதிகள் ஞானஸ்நானம் என்றால் இந்த மூன்று காரியங்களுள் ஏதேனும் ஒன்றை செய்வது என்று பொருள் தருகின்றன. ஆகிலும், நவீன ஆங்கில அகராதிகள் மெய்யான அர்த்தங்களை விடுத்து, தற்போது பழக்கத்திலுள்ள வார்த்தைகளின் பொருளையே பிரதிபலிக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

"ஞானஸ்நானம்" என்ற வார்த்தைக்கு மெய்யான பொருள் என்ன என்று அறிவதற்கு முன்பு புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள சான்றை கவனிப்போம். இயேசுவால் கட்டளையிடப்பட்டு, அப்போஸ்தலர்களால்

பிரசங்கிக்கப்பட்ட ஞானஸ்நானத்தைப் போலவே, யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்கும் "**தண்ணீர் மிகுதியாக**" (யோவான் 3:23) தேவைப்பட்டது. அப். 8:38, 39-ல் ஞானஸ்நானத்தில் நிகழ்வு ஒன்று விவரிக்கப்பட்டிருக்கிறது. "இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" அப்போஸ்தலனாகிய பவுல், ஞானஸ்நானத்தில் ஒருவனுக்கு என்ன நடக்கிறது என்பதை விவரிக்கும்படியாக "அடக்கம்" என்ற வார்த்தையை இரண்டு முறை பயன்படுத்துகிறார் (ரோமர் 6:4: கொலோ. 2:12) இந்த ஆதாரங்கள் நமக்கு ஒரே ஒரு செயல்பாட்டைத் தான் காட்டுகிறது - முழுகுதல்.

"ஞானஸ்நானம்" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையை நாம் கவனிக்கும்போதும் இதே முடிவுக்குத் தான் வரமுடியும். உண்மையில் "ஞானஸ்நானம் என்கிறதற்கு உரிய ஆங்கில பதமே, ஆங்கில வார்த்தை அல்ல, பேப்டிட்சோ என்கிற கிரேக்க வார்த்தையை ஆங்கிலம் அப்படியே தழுவிக் கொண்டது. ஒருவன் எந்த ஒரு தரமான கிரேக்க அகராதியை பார்த்தாலும், அதில் இந்த வார்த்தைக்கு, மூழ்குதல், ஒன்றுக்கு கீழ் செல்லுதல், ஒன்றால் மற்ற ஒன்றை முழுவதுமாக முழுக்குதல், என்ற பொருளையே தரும். ஆங்கில வேதாகமம் பேப்டிசம் (Baptism) என்ற வார்த்தையை அப்படியே ஆங்கிலத்தில் எழுதாமல், அதை மொழிபெயர்த்திருக்குமானால், எங்கெல்லாம் இந்த வார்த்தை வருகிறதோ அங்கெல்லாம் "முழுகுதல்" என்று தான் வந்திருக்க வேண்டும்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை, அது அவரால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டது என்று உண்மையாக நம்பும் ஒருவனுக்கு, மனுஷன் ஞானஸ்நானத்திற்கு என்ன விளக்கம் கொடுத்தாலும், புதிய ஏற்பாடு கொடுக்கும் விளக்கமே போதுமானதாக இருக்கிறது. அப்படி இருந்தாலும், மதத் தலைவர்கள் இதைக் குறித்து என்ன சொல்லுகிறார்கள் என்பதை கவனிப்பதும் நியாயமாகவே இருக்கும். இதை வாசிக்கும் நண்பரே, நாங்கள் யாரையும் புண்படுத்தும்படியாக இதை எழுதவில்லை.

**மார்ட்டின் லூத்தர் :** (லூத்தரன் சபையின் ஸ்தாபகர் 16ம் நூற்றாண்டு மறுமலர்ச்சியின் தந்தை) இவர் ஞானஸ்தானத்தைப் பற்றிக் கூறும்போது. "ஞானஸ்நானம் (Baptizo) என்கிற இப்பதம், கிரேக்க வார்த்தையாக வருகிறது. இதை லத்தீன் மொழியில் மெர்சியோ (Mersio) என்று மொழி பெயர்க்க வேண்டும்; அதற்கு தண்ணீரின் கீழ் ஒரு பொருளை முழுக்குதல் என்று பொருள்படும். அதாவது முழுகும் பொருள் முழுவதும் தண்ணீரால் மூடப்பட வேண்டும் என்கிறார்.

**ஜான் கால்வின்** (16ம் நூற்றாண்டு மறுமலர்ச்சி செய்தவர்களின் ஒருவர், பிரஸ்படடேரியின் சபையின் ஸ்தாபகர்) ஞானஸ்நானம் பற்றி விளக்குகையில். ஞானஸ்நானம் (Baptism) என்பதற்கு முழுகுதல் என்று பொருள், இக்காரியம் ஆதி திருச்சபையால் பின்பற்றப்பட்டது என்கிறார்.

**ஜான் வெஸ்லி** (மெதடிஸ்ட் சபையின் ஸ்தாபகர்) "அவருடன் அடக்கம் செய்யப்படவேண்டும்" - ஆதி திருச்சபை முழுகித்தான் இதை நிறைவேற்றியது நாமும் அப்படியே செய்ய வேண்டும் என்று ஞானஸ்நானம் பற்றிக் கூறுகிறார்.

**கத்தோலிக்க அகராதி :** "அப்போஸ்தலருடைய காலத்தில், ஞானஸ்நானம் பெருகிற மனிதனின் சரீரம் முழுவதும் தண்ணீரின் கீழ் மூழ்கும்படி செய்யப்படும், ஏன் என்றால் பவுல் இக்காரியத்தை இயேசுவுடன் அடக்கம் செய்யப்படுதல் என்று சொல்கிறார். அவர் ஞானஸ்நானத்தை ஒரு ஆவிக்குரிய கழுவுதலாக பார்க்கிறார்" என்கிறது.

மேலே சொல்லப்பட்டவைகளில் இரண்டு காரியங்கள் பொதுவானதாக இருக்கிறது.

1. ஞானஸ்நானம் - முழுகுதல் என்பதால் ஒரே கருத்துடையவர்களாக இருக்கிறார்கள்.

2. இவை அனைத்துமே ஞானஸ்நானத்தை தெளித்தல் அல்லது / மற்றும் ஊற்றுதல் என்று நடைமுறைப்படுத்தும் பிரிவினைச் சபையைச் சார்ந்தவர்களால் சொல்லப்பட்டது.

இது உண்மையாக இருந்த போதிலும், இச்சபையைச் சேர்ந்த அறிஞர்கள் முரண்பட்டு செயல்படுகிறார்கள். புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் முழுகுதலுக்கு குறைவாகவே இருந்தது, இருக்கிறது என்று ஒருபோதும் வாதிட முடியாது: அப்படி நாம் செய்வோமானால், புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தை நாம் மீறுகிறோம்.

**ஞானஸ்நானம் எடுக்க வேண்டியது ஏன்?**

இயேசுக் கிறிஸ்துவால் கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானத்தின் நோக்கத்தை குறித்து இரண்டு வகையான எண்ணங்கள் பிரதிபலிக்கப்படுகிறது: முதலாவதாக, ஞானஸ்நானம், இரட்சிக்கப்பட்ட ஒருவரின் கீழ்ப்படியும் செயலாகும், விசுவாசிக்கும் போது இரட்சிக்கப்பட்ட அவன் இப்பொழுது ஏதோ ஒரு பிரிவினைச் சபையின் அங்கமாக மாறுகிறான். இந்த கொள்கையின்படி, ஏற்கனவே, இரட்சிக்கப்பட்டவன் கிறிஸ்துவனாக இருப்பதால் இக்காரியம் கிறிஸ்துவுக்கு தன்னை கீழ்ப்படிவதின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

மற்றொரு கருத்து இப்படியாகச் சொல்கிறது. ஞானஸ்நானம் பழைய பாவங்கள் கழுவும்படியாக அல்லது இரட்சிக்கப்படும்படியாக ஒருவன் இறுதியாக செய்கிற கீழ்ப்படியும் செயலாகும் என்று. இந்த கருத்தின்படி ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்வரை இரட்சிப் படைவதில்லை, அப்படி அவன் ஞானஸ்நானம் பெறும் போதுதான் அவன் இரட்சிக்கப்படுவதால், அப்பொழுதுதான் அவன் சபையிலும் சேர்க்கப்படுகிறான் என்கிறது. வேதாகமம் இவை குறித்து என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

அப்போஸ்தலர்களிடம் இயேசு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி சொன்னார், அப்படிச் சொல்கையில் "விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்பட்டவன்" என்றும் சொல்லியிருக்கிறார். (மாற்கு. 16:16). நாம் இவ்வசனத்தை வரிசைப்படுத்தி கவனித்தால் 1. விசுவாசம் 2. ஞானஸ்நானம் 3. இரட்சிப்பு என்று இருக்கிறதே அல்லாமல் 1. விசுவாசம் 2. இரட்சிப்பு 3. ஞானஸ்நானம், (சபையில் சேர விரும்பும்போது) என்று வரிசைப்படுத்தப்படவில்லை இந்த வசனத்தில் ஞானஸ்நானம் இரட்சிக்கப்படும்படியாக நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனையாக, விசுவாசத்தை போலவே இடம் பெருகிறது.

"போய் பிரசங்கியுங்கள்" என்ற கட்டளையை அப்போஸ்தலர்கள் நிறைவேற்ற ஆர்ம்பித்த போது "பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். "(அப்.2:38)" இங்கு மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எப்படி தொடர்புடையதாக இருக்கிறது? ஞானஸ்நானம், பாவமன்னிப்புக்கு பின் இடம்பெறும் ஒரு

காரியம் என்று சாதிக்கிறவர்கள் மனந்திரும்புதலும் ஞானஸ்நானத்திற்கு பின் வருகிறது என்று சொல்லியே தீரவேண்டும். ஆனால், வேதாகமம் முழுவதும் இந்தக் கருத்துக்கு ஆதரவாக, ஒரே ஒரு வசனம் கூட இல்லை. பாவமன்னிப்பு, ஞானஸ்நானத்தற்கு பிறகுதான் நடக்கிறது என்பதை நாம் இந்த வசனத்தில் காண்கிறோம். இதற்கு முன் நாம் பார்த்த வசனத்திலும் "இரட்சிப்புக்கு" முன் ஞானஸ்நானம் என்பதைப் பார்த்தோம். தர்சுஸ் பட்டணத்தை சேர்ந்த சவுல், "நீ எழுந்து உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16) என்று கட்டளையிடப்பட்டான். ஞானஸ்நானத்திற்கு முன்பே ஒருவனுடைய பாவம் கழுவப்படுவது உண்மையானால், இந்த கட்டளை அர்த்தமற்றதாக இருக்கும்.

தண்ணீர் ஞானஸ்நானம் இரட்சிக்கப்படுவதற்கு அவசியம் என்று நாம் சொல்வோமேயானால் உடனே "தண்ணீரா" உங்களை இரட்சிக்கிறது என்று மறுப்பு தெரிவிப்பார்கள் அல்லது நம்மைப் பார்த்து அவன் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவை என்று சொல்வது தவறு என்று குற்றம் சுமத்துவார்கள். ஒருவேளை அவர்கள் நம்மைப் பார்த்து அப்படிச் சொன்னாலும் மாற்கு. 16:16 அப். 2:38 அப். 22:16 போன்ற வசனங்களை தான் அவர்கள் தவறு என்று சொல்கிறார்கள். ஆனாலும், இவ்வசனங்கள் தண்ணீர்தான் நம்மை இரட்சிக்கிறது என்று ஒருபோதும் சொல்லவேயில்லை. இந்த வசனத்தில் நம்மை சுத்திகரிப்பது எது என்றும் சொல்லப்படவில்லை. ஆனால் மற்ற வசனத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தமே நம்மை சுத்திகரிக்கிறது என்பது மிகத் தெளிவாக நாம் காணலாம். 2. பேதரு. 1:18,19 வெளி. 1:5)

இந்த சுத்திகரிப்பு எப்பொழுது நடக்கிறது அல்லது ஒருவன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு எப்படி தொடர்பு கொள்கிறான்? ஏற்கனவே சொல்லப்பட்ட வேத வசனமில்லாமல் "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (எபி. 9:26-28 ரோமர் 6:3). இயேசு சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தை ஒரு பாவி எங்கு சந்திக்கிறான்? பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பவுல் "நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம்" என்கிறார். (ரோமர் 6:3) ஞானஸ்நானத்தைப் பற்றிய மற்ற வசனத்தோடு இந்த வசனம் சரியானதாக பொருந்துகிறது. ஞானஸ்நானத்தைக் குறித்து தேவன் தனது வார்த்தையில் வெளிப்படுத்தியதின் நோக்கம் இரட்சிக்கப்பட்ட ஒருவன் கீழ்ப்படிதலின்

செயலை செய்யும்படியாக அல்ல. மாறாக, இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு கொள்ளும்படியான செயலாகவே வெளிப்படுத்துகிறார்.

புதிதான ஜீவன் உடையவர்களாக வாழுவதற்காக செய்யும் ஒரு செயலாகவே ஞானஸ்நானம் இருக்கிறது (ரோமர். 6:4) சபையானது இரட்சிக்கப்பட்டவர்களின் சேர்ப்பிடமாக இருப்பதால், கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படும் ஒரு செயலாக இது இருக்கிறது (அப். 2:41, 47, எபே. 5:23) வேத வாக்கியத்தின்படி ஒருவன் திருமுழுக்கு பெறாதவரைக்கும் இரட்சிப்படைவதில்லை என்ற உண்மையை உணர்கிற ஒருவனால்தான், ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என்று ஆழமான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். (1.பேதுரு 3:21) நாம் இதைப் புரிந்து கொண்டு தேவ மந்தையில் சேருவோமாக.

## பேதுருவின் நிருபத்தில் சோதனையைப் பற்றி..

1. தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (4:19)
2. நமது முன்னோடியான கிறிஸ்து துன்பப்பட்டார் (1:1, 2:21, 23,)
3. அவரின் சீஷர்களாகிய நாம் துன்பத்தை எதிர்பார்க்க வேண்டும். (4:12)
4. அதினாலே நாம் ஒருபோதும் கலங்கிவிடக் கூடாது. (3:10)
5. நாம் அவைகளை பொறுமையாய் சகித்துக் கொள்ளுங்கள் (2:23)
6. துன்பத்தில் தேவனை நாம் மகிமைப்படுத்துவதால் சந்தோஷப்படவேண்டும். (4:13)
7. மற்ற சகோதரர்களும் துன்பப்பட்டிருக்கிறார்கள் (5:9)
8. துன்பத்தினால் வரும் பலன் பரலோகம் என்பதை நாம் மறக்கக் கூடாது. (1:6,7)
9. தீமை செய்வதனால் அல்ல, மாறாக பிறருக்கு நன்மை செய்து பாடுபடவேண்டும் (2:20)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

பாடம்-2

4. வேதத்தைப் பற்றிய சுய சாட்சியைக் காட்டிலும் அது தேவனுடைய ஏவப்பட்ட வார்த்தைதான் என்பதற்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா?

1. ஆச்சரியப்படத்தக்க அவருடைய வேதத்தைப் பற்றிய இந்த அபாரமான உண்மைகளை எண்ணிப் பாருங்கள்.

அ. 66 புத்தகங்கள்.

ஆ. இந்த 66 புத்தகங்களையும், 40 வித்தியாசப்பட்ட ஆசிரியர் எழுதியிருக்கிறார்கள் அதில் சிலர் ஒருவரை ஒருவர் பார்த்ததுகூட இல்லை.

இ. 1600 வருடங்களுக்கு மேலாக எழுதப்பட்டது.

ஈ. மூன்று வித்தியாசப்பட்ட பாஷைகளில் எழுதப்பட்டது. எபிரேயு, அராமிக், கிரேக்கு.

2. ஆயினும் மனுக்குலத்தின் இரட்சிப்பு என்கிற ஒரே மையக் கருத்தில் முரண்பாடோ, சிக்கலோ இல்லை.

3. எந்தவித மேற்பார்வையுமின்றி 40 இசை வல்லுநர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தனித்தனியே அமைக்கப்பட்ட இசையை ஒற்றுமையாக வாசித்தால் எப்படியிருக்குமோ, அப்படியே இதுவும் இருக்கிறது.

4. முன்னுரைக்கப்பட்டு பல நூற்றாண்டுகளுக்குப்பின் முழுமையாக, சரியாக நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் மனிதர்களால் ஒரு போதும் செய்ய முடியாதவொன்று இது நிச்சயமாகவே கடவுள்தான் வேதாகமத்தை எழுதியதற்கு ஒரு அடையாளமாயிருக்கிறது.

1. உதாரணமாக கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய இராஜ்ஜியத்தைக் குறித்தும், அவர் இப்பூமிக்கு வருமுன்பே பழைய ஏற்பாட்டில் 456 முறை முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று சிலர் கணக்கிட்டுள்ளன.

2. இந்த எடுத்துக்காட்டுகளை எண்ணிப் பாருங்கள்.

| | | தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாடு | | நிறைவேற்றுப் புதிய ஏற்பாடு |
|---|---|---|---|---|
| 1. | மேசியாவைப் பற்றிய முதல் வாக்குத்தத்தம் | ஆதி | 3:15 | கலாத் 4:4 |
| 2. | யூதா கோத்திரத்தில் பிறந்தவர் | ஆதி | 42:10 | வெளி 5:5, எபி 7.14 |
| 3. | கன்னியின் வயிற்றில் பிறப்பார் | ஏசாயா | 7:14 | மத் 1:23 |
| 4. | பெத்லேகேமில் பிறப்பார் | மீகா | 5:2 | மத். 2:1-6 |
| 5. | துக்கம் நிறைந்தவர் அசட்டைப்பண்ணப்பட்டவர் புறக்கணிக்கப்பட்டவர் | ஏசா | 53:2, 3 | மத். 27:30, 31 |
| 6. | மற்றவர்களின் பாவங்களை சுமப்பார் | ஏசா | 53:5, 6 | 1 பேதுரு 2:4 |
| 7. | ஒரு நண்பனால் காட்டிக் கொடுக்கப்படுவார் | சங். | 41:9 | மாற் 14:10,11 |
| 8. | முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டிக் கொடுக்கப்பட்டார். | சகரியா | 11 :2 | மத் 26 : 15 |

ஓ) பாகுபாடின்மை :

1. மனிதர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள், கருப்பொருளின் நன்மையை மேம்படுத்தியோ அல்லது தீமையை மறைத்தோ எழுதப்படும். இரண்டையும் ஒரு போதும் ஒன்று சேர்த்து எழுதமாட்டார்கள்.

2. இதை வேதாகமத்தோடு சற்றே ஒப்பிட்டுப் பாருங்கள்.

அ. **நோவா** - நீதியைப் பிரசிங்கித்தனர், ஆனால் மது மயக்கத்திலும் இருந்தவராக காட்டப்பட்டுள்ளார்.

ஆ. **தாவீது** - தேவனுடைய இருதயத்துக்கேற்ற மனுஷன், ஆனால் கொலை, விபச்சாரம் பாவங்கள் குற்றமுள்ளவனாகவும் காட்டப்பட்டுள்ளான்.

இ) **ஆபிரகாம்** - தேவனிடத்தில் ஆழமான விசுவாசம்கொண்டவர் ஆனால் பார்வோனிடத்தில் பொய் சொன்னார்.

ஈ) **பேதுரு** - மிகப்பெரிய விசுவாசமும் பெலனும் இருந்தது. ஆனால் மூன்றுதரம் கிறிஸ்துவை மறுதலித்தார் தேவன் பட்சபாதமற்றவர். ஆகவே நல்லது தீயது ஆகிய இரண்டையும் உரைத்திருக்கிறார்

**CHARLIE DIPALMA** **G. DANIYAL**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00-9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,

அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்

விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி,

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண்-27, காங்கேயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**